★ ஈழத்தமிழர்கள் ஆதரவு மாநாடுகள் தடையின் எதிரொலி

# பேச்சுரிமை, எழுத்துரிமை வேண்டுமென சென்னையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

தமிழகத்தில் பேச்சுரிமை, எழுத்துரிமை என்பன அ. தி மு. க அரசினால் மறுக்கப்படுவதாக ஆட்சேபம் தெரிவித்து சென்னையில் அண்மையில் ஆட்சேப ஊர்வலம் நடைபெற்றது. பாட்டாளி மக்கள் கட்சி. தமிழ் பொதுவுடமை இயக்கம், தமிழர் தேசிய இயக்கம், தமிழ் தேசிய முன்னணி என்பன ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தன. ஊர்வலம் சென்னை கோட்டையில் முடிவடைந்தது. அங்கு வைத்து ஊர்வலத்தில் சென்றவர்களைக் முதலமைச்சர் ஜெயலலிதாவின் செயலாளரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. முதலமைச்சருக்கு எழுதப்பட்ட அம் மகஜரில், பேச்சுரிமை, எழுத்துரிமை என்பன இப்போது அதிகளவில் புறக்கணிக்கப்படுகிறது, தமிழ் உணர்வு காரணமாக கூட்டங்கள் நடாத்துவோர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்றனர். அவ்வாறு கைதானவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

—04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு | விலை ரூபா:- 5 - 00

முரசொலி

முரசு 05 ஒலி 278 பிரசோற்பத்தி ஐப்பசி 01 (18 · 10 · 1991) வெள்ளி

பொதுசன நூலகம் உடனுதவும் 18-10-1991 பகுதி யாழ்ப்பாணம்

# கடற்படையும், விமானப்படையும் வடமராட்சியில் கூட்டுத் தாக்குதல்

## வல்வெட்டித்துறையில் அதிக சேதம்

வடமராட்சிப் பகுதியில் நேற்று பிற்பகல் கடும் விமானத்தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. வடமராடசிப் பகுதியின் கிழக்குப்பகுதியின் கடற்பரப்பிலிருந்தும் மாலை பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது.

நேற்று பிற்பகல் 3 45 மணியளவில் இரண்டு பொம்மர்கள், அவ்ரோ விமானம், ஹெலிகள் என்பன தாக்குதலை ஆரம்பித்தன

வல்வெட்டித்துறைப் பகுதியில் உதயசூரியன் விளையாட்டு மைதானம், சிவகுரு வித்தியாசாலை ஊரிக்காடு மைலியந்தனை ஆகிய பகுதிகளில் குண்டு வீச்சு நடைபெற்றது. இதனால் சிவகுரு வித்தியாசாலை ஒரு பகுதி சேதமடைந்தது. மைலியந்தனை

— 04 ஆம் பக்கம் பார்க்க

## பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் வடபகுதிக்கு திடீர் விஜயம்!

ஸ்ரீலங்கா பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்று வடபகுதிக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். பலாலி, காரைநகர் முகாம் அதிகாரிகளை இவர் சந்தித்துப் பேச்சு நடாத்தினார்,

பலாலி முகாமில் வடபகுதி இராணுவத் தளபதி விஜய விமலரட்னவுடன்பேச்சுநடாத்திய பின் காரைநகர் கடற்படை முகாமிற்கும் சென்றார்.

—04ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சிப்பகுதி மக்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு

வடமராட்சிப் பகுதிகளில் இருந்து அகதி முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு புனர்வாழ்வு ஒன்றியம் மூன்று நாள்களுக்கு உணவு வகைகளைத் தயாரித்துக்கொடுக்க யாழ் அரசாங்க அதிபர் ஏற்பாடு செய்துள்ளார்.

இதன் பின்னர் ஒரு வாரத்துக்குரிய இலவச உலர் உணவும், குடும்ப உணவு அட்டைக்கு கட்டுப்பாட்டு விலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களும் வழங்கப்பட

—04ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சியிலிருந்து மக்கள் இடம்பெயர்வு

வடமராட்சி கிழக்கு மக்கள் அரசின் அறிவிப்பையடுத்து நேற்று முன்தினம் இரவுமுதல் நேற்று மாலை வரை வெளியேறிக்கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

இவர்கள் தென்மராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து

—04ஆம் பக்கம் பார்க்க

## கடற்படை தாக்குதல்

தீவுப்பகுதி கடல் பகுதியிலிருந்து கடற்படையினர் புங்குடுதீவு, குறிகாட்டுவான் பகுதிகளை நோக்கி ஷெல், பீரங்கித் தாக்குதல்களை

—04ஆம் பக்கம் பார்க்க

## மந்திகை ஆஸ்பத்திரியில் நோயாளர் வெளியேற்றம்

மந்திகை ஆஸ்பத்திரியில் பணிபுரியும் ஊழியர்கள் முழுமையாக வெளியேறியுள்ளதால் அங்கு சிகிச்சை பெற்ற நோயாளிகள் நேற்று யாழ் பெரியாஸ்பத்திரிக்கு வந்துள்ளனர்.

வேறு சில நோயாளிகள் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது, 07, 09

## யாழ் மாவட்டம் ஊரடங்கு

யாழ் மாவட்டத்தில் இன்று காலை 5 மணிமுதல் ஊர

— 04 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய வானொலி நிருபரை வெளியேறப் பணிப்பு

சபாநாயகர் எம். எச். முஹமட் இராஜினாமா செய்துவிட்டார் என செய்தியை வழங்கிய அகில இந்திய வானொலி கொழும்பு நிருபர் கருப்பசாமி விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இந்திய வானொலி நிருபர்

—04ஆம் பக்கம் பார்க்க

## கடற்படைப் படகுகள் நடமாட்டம்

வடமராட்சி, வடமராட்சி கிழக்கு பகுதியின் கரையோ

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவு மோதல் 2 படையினர் பலி

ஆனையிறவு முகாமின் பிரதான கண்டி வீதியில் அமைந்திருந்த காவலரணில் இருந்து நேற்றுக்காலை வெளியேறிய படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர். இதில் இரு சிப்பாய்கள் பலியாகினர் மேலும் இருவர் மிதிவெடியில் சிக்கி காலிழந்தனர். இதைத் தொடர்ந்து படையினர் காவலரணுக்கு பின்வாங்கினர்.

## விமானங்கள் வட்டமிட்டன

ஹெலிகொப்டர், சீ பிளேன், அவ்ரோ விமானங்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## நவாலியில் ஹெலி சூடு

நேற்று மாலை நவாலி வெளியில் ஹெலிகொப்டர் ஒன்று வட்டமிட்டு சரமாரியாகச் சுட்டது சேதவிவரங்கள் தெரியவில்லை. (06,18)

# கொக்குத் தொடுவாயில் அதிரடித் தாக்குதல்

## 27 படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு

முல்லைத்தீவு மாவட்டம் கொக்கிளாய் கஜபாபுர இராணுவ முகாமிலிருந்து விமானப்படை உதவியுடன் முன்னேறிய படையினர் மீது புலிகள் அதிரடித்தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினமிரவு கொக்குத்தொடுவாய்ப் பகுதிக்கு வந்த இப்படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர்.

இத்தாக்குதலின் போது 27 படையினர் பலியானதாகவும் 3 இராணுவ அதிகாரிகள் உட்பட 75 படையினர் காயமடைந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் சரத்முனசிங்க நேற்றுத் தெரிவித்தார்,

படையினரிடமிருந்து ஏ. கே. எல். எம். ஜி. - 3, அதற்கான ரவை கூடுகள் - 3, ரி-56 - II - 8, அதற்கான ரவை கூடுகள் - 7, ரி - 56-8 புகைக் குண்டுகள் - 1, ஐ. எம் ரவைகள்-450, ஐ. எம். ரவைகள் லிங்குடன் - 402, நேட்டோ ரவைகள் 234, ஆர். பி. ஜி. ஷெல் - 1, புரப்

—04ஆம் பக்கம் பார்க்க

# இலங்கையில் பரந்த அளவில் எயிட்ஸ் பரவும் அபாயம்

இலங்கையில் எயிட்ஸ் நோய் மிகப் பரந்த அளவில் பரவும் ஆபத்து இருப்பதாக எயிட்ஸ் நோய் தடுப்புத் திட்டத்தின் பணிப்பாளர் டாக்டர் ஜெயக்குரு கூறியுள்ளார்.

ஆசியாவில் பத்து லட்சம் மக்களுக்கு இந் நோயின் அறிகுறி இருப்பதாகத் தெரிவித்துள்ள உலக சுகாதார ஸ்தாபனம் ஆபிரிக்காவில் அறுபது லட்சம் மக்களுக்கு இந்நோயின் அறிகுறி இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

இந்த நோய் அனேகமாகச் சுற்றுலாப் பயணிகள் மூலமாகவே பரவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

## சுருக்கெழுத்தாளர் நியமனத்திலும் புறக்கணிப்பு

# 75 பேரில் இருவர் மட்டுமே தமிழர்

பொது நிர்வாக மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சினால் கடந்த ஏழாம் திகதி வழங்கப்பட்ட சுருக்கெழுத்தாளர் நியமனத்தில் தமிழர்கள் திட்டமிட்ட அடிப்படையில் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

அமைச்சு 75 பேருக்கு சுருக்கெழுத்தாளர் நியமனத்தை வழங்கியது. இவர்களில் 49 பேர் சிங்களத்திற்கும், 24 பேர் ஆங்கிலத்திற்கும் தெரிவாகியுள்ளனர். இருவர் மட்டுமே தமிழுக்குத் தெரிவாகியுள்ளனர்.

அரசின் புதிய விகிதாசார நியமனமுறைக்கு இது முற்றிலும் முரணானது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 'ஆங்கில ஆர்வம்-நம் மொழிப்பற்றை பாதிக்கலாகாது'

''இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்து அறிவை வளர்க்க ஆங்கிலம் அவசியமாகின்றது. ஆனால் அது நமது தாய்மொழிப்பற்றை அழிக்கும் விதத்தில் அமையலாகாது''

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நாவண்ணன் நேற்று முன்தினம் மாலை யாழ் இந்து குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற ரஸெப்-91 சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் சிறபபு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டார்

இவ் வைபவத்தில் யாழ் கல்விப் பணிப்பாளர்இரா சுந்தரலிங்கம் அவர்கள் பயிற்சி நெறியை மேற்கொண்டோருக்குச் சான்றிதழ்களை வழங்கினார்.

மாணவர்களால் வெளியிடப்பட்ட மலரின் முதற் பிரதியை பலாலி ஆசிரிய கலாசாலை உப- அதிபர் சோ. பத்மநாதன் பெற்றுக் கொண்டார்.

உதவிப் பணிப்பாளர் (ஆங்கிலம்) துரை தியாகராஜா, யாழ் இந்து அதிபர் பஞ்சலிங்கம், ரஸெப் மாநில இணைப்பாளர் தேவபாலசிங்கம் ஆகியோர் உரையாற்றினர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## சனசமூக நிலைய ஆண்டுவிழா

கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையத்தின் 21ஆவது ஆண்டு நிறைவுவிழா எதிர் வரும் 20 ஆம் திகதி நிலைய முன்றலில், நிலையத் தலைவர் கே. தியாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கலந்து கொள்வார். (16)

## பிரிட்டிஷ் சத்திரசிகிச்சை நிபுணர்கள் இம்மாதம் இலங்கை வருகிறார்கள்

பிரிட்டிஷ் இருதய சத்திர சிகிச்சை நிபுணர்கள் குழுவொன்று இம்மாதம் 28 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளது.

கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் இருதய சத்திரசிகிச்சைகளை இக்குழுவினர் மேற்கொள்வர்.

## அரசதிட்டத்தில் முதலிடப்படும் பதுக்கல் பணத்திற்கு வரிச் சலுகை

வெளிப்படுத்தப்படாமல் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் பணத்தைக் குறிப்பிடப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள். வர்த்தக நிலையங்கள், அலுவலகக் கட்டிடங்கள் என்பவற்றை நிர்மாணிப்பதற்கு முதலீடு செயது வரி மன்னிப்புப் பெறும் வாய்ப்பொன்று அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது

இவர்கள் 125 சதுர மீற்றருக்கு மேற்படாத நிலப் பரப்பையுடைய வீடுகளை அல்லது 50 லட்சம் ரூபாவுக்கு மேற்படாத பெறுமதியுடைய கடைகள், அலுவலகங்கள் ஆகியவற்றை அமைபதில் செலவிட வேண்டும். இத்தகைய கட்டிடங்களைக் கொள்வனவு செய்வோருக்கும் இத்திட்டத்தின் கீழ் வரிமன்னிப்பு கிடைக்கும்.

இந்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமான இச்சலுகைகள் 3ஆண்டுகளுக்கு நீடிக்கும். இப்பணம் எங்கிருந்து வந்தது என்பது பற்றிக் கேள்வி எதுவும் கேட்கப்படமாட்டாது

## பதவி மாற்றம்

காரைநகர் கொத்தணி அதிபரும், காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலய அதிபருமான எம். திருநீலகண்டசிவம் பண்டத்தரிப்புக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய அதிபர் செ. தேவதாசன் காரைநகர் கொத்தணி அதிபராகவும், காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலய அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். (13)

## கல்முனையில் மினிக் கச்சேரி

கல்முனை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் இம் மாதம் முதல் மினிக் கச்சேரியாக மாறவுள்ளது.

இம் மினிக் கச்சேரியின் கீழ் காணி விவகாரங்கள் தொடர்பான பணிகள் வரவுள்ளது. (08)

## அன்பகத்திற்கு புதிய மண்டபம்

அரியாலை அன்னை அன்பகச் சிறுவர் இல்லத்தில் வி பி. மண்டபம் அண்மையில் ரோமாபுரியில் மறைப்பணி புரியும் அருட்சகோதரி சோபியாவினால் திறந்து வைக்கப்பட்டது.

அன்பக வளர்ச்சிக்குப் பணி புரிந்துவரும் அருட்திரு. வின்சன் பற்றிக் (வி பி) அடிகளாரின் பெயரில் இம் மண்டபம் அமைக்கப் பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு மைதானம்

## வேங்கை ஏஞ்சலா போட்டிகள்

வீரவேங்கை ஏஞ்சலா ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்காக ஈச்சமோட்டை மகளிர் முன்னேற்றச் சங்கம் நடாத்தும் வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென் அந்தனீஸ் கழக அணி முரசொலி விளையாட்டுக் கழக அணியை 22: 14 என்ற புள்ளிகள் கணக்கில் தோற்கடித்தது.

விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ. எவ். ரூபசிங்கம் ஆட்டத்தை நெறிப் படுத்தினார். இப்போட்டியின் இறுதி ஆட்டம் எதிர் வரும் 19 ஆம் திகதி மாலை 3 30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இவ்வைபவத்தில் வட கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் திரு. எம். மரியதாஸ் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (16)

## மேஜர் அன்ரனி போட்டிகள்

ஈச்சமோட்டை சனசமூக நிலையம் வீரவேங்கை மேஜர் அன்ரனியின் ஞாபகார்த்தமாக நடாத்தும் கரப்பந்தாட்டப்போட்டியின் ஓர் அங்கமாக நேற்று முன்தினம் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும் வள்ளுவன் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் இடம்பெற்ற ஓவர்கேம் முறையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் அரியாலை விளையாட்டுக்கழகம் 15:12, 15:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரு நேர் செற்றுகளால் வெற்றி பெற்று அரை இறுதி ஆட்டத்தில் ஆடத் தகுதி பெற்றது. நடுவராகக் ரீன் டீ. ஏ எம். குணசிங்கமும் உதவி நடுவராக எஸ். நாகராசாவும் கடமையாற்றினார்கள். (16)

யாழ்ப்பாணம் சைவசித்தாந்த உயர் நிறுவன
நிதி உதவிக்காக

19 10 - 91 (சனி) யாழ் இந்து குமாரசாமி மண்டபத்தில் பி. ப. 2. மணிக்கு இலங்கை வேந்தனின் கதகளி பரதநாட்டியம் புலவர் முத்து இராசரத்தினத்தின் எல்லாளன், சங்கிலியன், பண்டாரவன்னியன், கண்டியரசன் முதலிய வரலாற்று நாடக வரிசையில்

"இலங்கைவேந்தன்"
(இசை; நடன, நாடகம்)



இராவணனாக இலங்கை வேந்தன் தோன்றும் காட்சி

சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை கௌரவ அதிபர்

சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை கௌரவ அமைப்பாளர்

10018

அன்பளிப்பு :- பிள்ளையார் அப்பளத் தொழிற்சாலை
148, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
வெளிவாரிப் பட்டப்படிப்பு

துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பை ஆரம்பித்து வைக்கும் வைபமும், 1990/91 ஆம் கல்வியாண்டு வெளிவாரி மாணவர்கள் பல்கலைக்கழக புகுமுகம் நிகழ்ச்சியும் 1991.10.22 ஆம் திகதி கைலாசபதி கலையரங்கத்தில் இடம் பெறவுள்ளன. வெளிவாரிப்பட்டப் படிப்புக்கு விண்ணப்பித்த மாணவர்கள், இந் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும் படி கோரப்படுகின்றனர். நிகழ்ச்சிகள் இரு அமர்வுகளாக இடம் பெறவுள்ளன.

முதல் அமர்வு - முதற்கலை மாணவர்கள்
காலை 9 00 - காலை 11.00

இரண்டாவது அமர்வு - முதல் வர்த்தக மாணவர்கள்
காலை 11.30 - 1.00

வெளிவாரி மாணவர்கள் தமது அனுமதி அட்டையை 20 10.91 வெளிவாரிப்பதிவுப்பிரிவில் பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதி அட்டை இல்லாது வெளிவாரி மாணவர்கள் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள முடியாதென்பதை அறியத்தருகின்றேன்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

10016

# 'பிரேமா'வுக்குக் கிடைத்தது உண்மையில் வெற்றியல்ல

## ஸ்ரீலங்காவின் அரசியல் புகைச்சல் பற்றி பிரபல இந்திய விமர்சகர் கருத்து

சமீபத்தில் ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றவிசாரணைப் பிரேரணை விவகாரம் தொடர்பாக வழங்கப்பட்ட தீர்ப்பு பிரேமதாஸவின் சாமர்த்தியத்துக்குக் கிடைத்த வெற்றியேயன்றி உண்மைக்குக் கிடைத்ததல்ல என இந்தியாவின் பிரபல்யமான அரசியல் விமர்சகர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அகில இந்திய வானொலியின் உலக ஒலிபரப்பில் நேற்றுக்காலை இவரின் விமர்சனம் ஒலிபரப்பப்பட்டது.

புகைந்து கொண்டிருந்த அரசியல் நெருக்கடி புஷ்வாணமாகிவிட்ட போதிலும் ஆளும் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் ஆழமான காயங்கள் ஆற வெகு நாளாகும்.

அதிபருக்கு எதிராகச் சுட்டுவிரல் நீட்டிய லலித் சம்பிரதாயமென்ற போக்கில் தூக்கியெறியப்பட்டிருந்தாலும் கூடக் கட்சியில் அவரது செல்வாக்கு இன்னும் குறைந்து விடவில்லை - வெளியிலிருந்து பிரேமாவுக்கு எதிரான போராட்டத்தைத் தொடர அவர் தயங்கமாட்டார்.

தனது எதிர்க் கட்சியினருக்கு எதிராகவே நிலைமை தலைகீழாகப் புரண்டது பற்றி அதிபர் களிப்புற்றாலும் அவருடைய தலைமைக்கு எதிராக எழும் ஒலங்கள் தீவிரமாகவே வருவதை அவர் கண்டு கொள்ளாமல் கவனயீனமாக இருந்து விடவும் முடியாது என மேற்படி விமர்சனத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மனித உரிமை மீறும் நாடுகளுக்கு உதவக்கூடாது

## ஹராரே மகாநாட்டில் பிரிட்டன், கனடா கோரிக்கை

மனித உரிமைகளைப் பேணும் நாடுகளுக்கே நிதி உதவிகளையும் ஏனைய உதவிகளையும் வழங்கவேண்டுமென தற்பொழுது ஹராரேயில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொதுநலவாய நாடுகளின் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெரிய உதவி வழங்கும் நாடுகளான பிரிட்டனும், கனடாவுமே காமன்வெல்த் கூட்டத்தில் இக்கோரிக்கையை வலியுறுத்தியுள்ளன

மனித உரிமைகளுடன் தொடர்வுபடுத்தி உதவி வழங்கும் இக் கோரிக்கை ஏற்கப்படின் சர்வதேச மன்னிப்புச் சபையின் கண்டனத்துககு அடிக்கடி உள்ளாகி வரும் இலங்கை இதனால் பெரும் பொருளாதாரப் பாதிப்பை எதிர்நோக்க வேண்டிவருமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தொண்டர் ஆசிரியர் நியமனத்துக்கு பல போலி விண்ணப்பங்கள்

தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனம் பெற அனுப்பப்பட்டுள்ள 25 ஆயிரம் விண்ணப்பங்களில் பத்துச்சதமானவை போலியானவை என கல்விச்சேவைகள் ஆணைக்குழுத் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்துளளார்.

தொண்டர் ஆசிரிய நியமனம் பெற கிடைத்த விண்ணப்பங்கள் தொடர்பான விவரங்களை வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஒரு சில இடங்களில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்று சோதனை செய்ய முடியாதுள்ளதினால் இப்பகுதிகளுக்கான நியமனம் வழங்குவது பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (08)

## இந்தியாவில் வெளியான இலங்கையரின் நூல்களுக்கும் பரிசு

இலங்கையர்களினால் எழுதப்பட்டு இந்தியாவில் வெளியிடப்பட்ட நூல்களும் சாகித்தியப் பரிசுக்கு சேர்க்கப்படவுள்ளன,

1990ஆம் ஆண்டு சாகித்திய மதிப்பீட்டுக்கு இத்தகைய நூல்களும் தற்பொழுது இந்து கலாசார அமைச்சினால் ஏற்கப்பட்டு வருகின்றன.

1990 சாகித்திய மதிப்பீட்டுக்குரிய நூல்கள் நவம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

## தெரிவுப் பரீட்சையில் தேறியோருக்கு விரைவில் ஆங்கில ஆசிரியர் நியமனம்

கடந்த ஆகஸ்ட் மாதம், 31 ஆம் திகதி நடாத்தப்பட்ட ஆங்கில ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சையில் தோற்றியோரின் புள்ளிகள் சில தினங்களில் பரீட்சைத் திணைக்களத்தினால் கல்விச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்தப் புள்ளிகளின் அடிப்படையில் 2000 பேருக்கு நேரடியாக ஆங்கில ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது. ஏனைய 1500 பேருக்கும் 10 மாத ஆங்கிலப் பயிற்சியின் பின் நியமனம் வழங்கப்படும்.

மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, பதுளை, திருமலை, அம்பாறை, பொலநறுவை, மொனராகலை ஆகிய இடங்களில் ஆங்கில ஆசிரியர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது

இத்தெரிவுப் பரீட்சை வடபகுதியில் நடாத்தப்படவில்லை என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### பதவி

கலாசார அலுவல்கள் தகவல்துறை அமைச்சு இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. (08)

## சாந்தசோலை சுற்றுப்பாதை மழையினால் பாதிப்பு

வவுனியாவில் பருவமழை பெய்ய ஆரம்பித்துள்ளதையடுத்து தாண்டிக்குளம் வழியான பயணத்தில் சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மழையினால் சாந்தசோலை ஊடான சுற்றுப்பாதை வயல்கள் சேறும், சகதியுமாகக் காணப்படுகின்றன.

மேலும் மழை பெய்தால் சாந்தசோலை ஊடான 6 மைல் தூரத்தையும் நடந்து கடப்பதில் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிவருமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சீருடையில் சென்றோரால் பௌத்த விகாரை சூறை!

இராணுவ சீருடையில் சென்ற கோஷ்டியொன்று விகாரையை சோதனையிடப் போவதாகக் கூறி அங்கிருந்த பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாம்

இச்சம்பவம் ஹக்மனைப் பகுதியில் உள்ள கிருந்தை புவக்கஹமடித்த விகாரையில் நடந்துள்ளது.

இக்கோஷ்டி விகாரையிலிருந்த பிக்குமாரைப் பயமுறுத்தி அங்கிருந்த காவிச் சீருடைகளையும் அபகரித்துச் சென்றுள்ளது. (08)

## சென்னைத் துறைமுகம் ஸ்தம்பிதம் கடற்படை சேவைக்கு அழைப்பு

சென்னைத் துறைமுகத்தில் கடந்த பதினொரு தினங்களாக ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

வேலை நிறுத்தம் செய்து வரும் ஊழியர்களில் ஒருபகுதியினர் உண்ணாவிரதப் போராட்டத்தையும் ஆரம்பித்துள்ளனர். ஐந்து இழுவைப்படகுகளும் நான்கு நங்கூரப்படகுகளும் வேலை நிறுத்தக்காரர்களினால் சேதமாக்கப்பட்டன.

ஏற்றுமதி வேலைகள் பாதிக்கப்பட்டதையடுத்து கடற்படையினர் பணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## யாழ் வைத்தியசாலை ஊழியர்க்கு கஷ்டப்படி வழங்க மறுப்பு!

யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்க்கு கடந்த வருடம் யூன் முதல், டிசம்பர் மாதம் வரையிலான கஷ்டப்படி நிவாரணப்பணம் வழங்குவதற்கு சுகாதார அமைச்சு மறுத்து விட்டது.

கடந்த வருடம் யூன் மாதம் 18 ஆம் திகதி முன்னறிவித்தல் எதுவுமின்றி போதனா வைத்தியசாலையினை மானிப்பாய்க்கு இடமாற்றம் செய்தமையினால் இப்பணத்தை வழங்க முடியாது, என இது குறித்து பேச்சு நடாத்த கொழும்பு சென்ற யாழ் வைத்தியசாலைக் குழுவிடம் சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்ததாகவும் அறியப்படுகின்றது. (07)

## வெளிவாரிப் பட்டப்படிப்பு 22 ஆம் திகதி ஆரம்பமாகும்

யாழ் பல்கலைக் கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பு எதிர்வரும் 22 ஆம் திகதி கைலாசபதி கலையரங்கில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்தப் பட்டப்படிப்பு இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது. முதல் அமர்வு காலை 9 மணி முதல் 11 மணிவரை முதற் கலை மாணவர்களுக்கும், இரண்டாவது அமர்வு காலை 11 30 மணி முதல் ஒரு மணிவரை முதல் வர்த்தக மாணவர்களுக்கும் நடைபெறவுள்ளது.

வெளிவாரி மாணவர்கள் அனைவரும் தமக்குரிய அனுமதி அட்டையை 20 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு பதிவாளர் கேட்டுள்ளார். (04)

## யாழ்தேவி ரயில் விபத்தில் காயமடைந்தோருக்கு நஷ்டஈடு

கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கம்பஹாவுக்கு அருகில் யாழ்தேவி ரயில் தடம்புரண்டதினால் காயமடைந்த பயணிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் போக்குவரத்து அமைச்சினால் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இந்த விபத்தில் சுமார் 25 பயணிகள் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

## மானிய மற்றும் கடனடிப்படையில் துலா வழங்கப் புதிய திட்டம்

தமிழீழத்தின் பொருளாதாரத்தினை மேம்படுத்துமுகமாக தமிழீழ ஆய்வு நிறுவனம் சகல வழிகளிலும் விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுத்து வருகின்றது. இந்த வகையில் சிறுதானியம், மற்றும் பணப்பயிர் தவிர்ந்தஉணவுப்பயிர் செய்யும் விவசாயிகளுக்கு நீர் இறைப்பு வசதிக்காக 'துலா' செய்து கொடுப்பதற்கு முன்வந்துள்ளது.

இத்திட்டம் 25% மானியத்திலும், 75% கடனடிப்படையிலும் அமையும் துலா தேவையான சகல விவசாயிகளுக்கும் கிராமிய உறபத்திக் குழுக்கள் ஊடாகத் தமிழீழ ஆய்வு நிறுவன யாழ் மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## அரச திணைக்களங்கள் இயங்கிய கட்டிட உரிமையாளர்க்கு நஷ்ட ஈடு

அரச திணைக்களங்கள் தனியாருக்குச் சொந்தமான வீட்டில் அல்லது கட்டிடத்தில் இயங்கி வந்து அக்கட்டிடம் வன்செயல் காரணமாகச் சேதமடைந்திருந்தால் அக்கட்டிட உரிமையாளருக்கு ஒன்றரை லட்சம் ரூபா வரையிலான நஷ்டஈடு வழங்கப் புனர்நிர்மாண அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆனால் வங்கிகள், வர்த்தக கூட்டுத்தாபனங்கள் இவ்வாறு தனியார் மட்டங்களில் இயங்கி அவை சேதமடைந்தால் இக்கொடுப்பனவு அவற்றின் உரிமையாளர்களுக்குக் கிடைக்காது. (15)

## இலவசம்

இளவாலை- முள்ளானை கலைவாணி சனசமூக நிலையத்தின் பொன்விழா வருட நிறைவை முன்னிட்டு ஐயாயிரம் மரக்கன்றுகளைக் வழங்கவுள்ளனர். (13)

## கிளி. மாவட்ட தரிசுக் காணிகள் 800 விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் பல தரிசுக் காணிகள் இனம் காணப்பட்டுள்ளது, காணி அற்ற 800 விவசாயிகளுக்கு உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக தற்காலிகமாக இக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் தரிசுக் காணிகள் இனங்காணப்பட்டு காணி அற்ற விவசாயிகளுக்கு வழங்குவதை கிளிநொச்சி மாவட்ட ஆய்வு நிறுவனம் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. உற்பத்தி செய்யப்படாத தாராளமான காணிகள் தற்போது முழுமையாக உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக ஆய்வு நிறுவன செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

# உத்தரபிரதேசத்தில் இரு குண்டு வெடிப்புகள்

# 42 பேர் பலி, நூற்றுக்கு மேற்பட்டோர் காயம்

இந்தியாவின் மத்திய மாநிலமான உத்தரபிரதேசம் உருத்திரபூரில் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவமொன்றில் 42 பேர் பலியானார்கள், நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர், முப்பது பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

மதவைபவம் ஒன்றில் 3000 க்கும் மேற்பட்டோர் குழுமியிருந்தபோதே இக்குண்டுவெடிப்பு இடம்பெற்றது

இக்குண்டு வெடித்து பத்து நிமிடங்களில் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு முன்னால் மற்றொரு குண்டும் வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எவரும் இச் சம்பவத்திற்கு உரிமை கோராத போதிலும் சீக்கியத் 'தீவிரவாத அமைப் பொன்றே இதற்குக் காரணமென சந்தேகிக்கப்படுகின்றது.

## இந்திராணி ஆஸ்பத்திரி மூடப்பட்டுள்ளது

வல்வெட்டித்துறை இந்திராணி அரசினர் ஆஸ்பத்திரியும் நோயாளர், ஊழியர்கள் இன்றி நேற்று மூடப்பட்டுள்ளது

இங்கு சிகிச்சைபெற்றுவந்த நோயாளிகள் வேறு ஆஸ்பத்திரிகளுக்குச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(9)

## கோப்பாயில் அகதிகளுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி

வடமராட்சிப் பகுதியில் இருந்து கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அகதிமுகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை நிவாரணம் வழங்கியுள்ளது,

கோப்பாய் பிரிவு செஞ்சிலுவைச்சங்க கிளையினர் எடுத்த முயற்சியால் சுமார் 50 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்பட்டது. 06

**ஸ்ரீமாவோ அறிவிப்பு**

## சுதந்திரக்கட்சி செயலாளர் மாற்றம் செய்யப்படுவார்!

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளரை மாற்ற கட்சித்தலைவி முடிவு செய்துள்ளதாக கொழும்புப் பத்திரிகை செய்தியொன்று தெரிவிக்கின்றது.

தற்போதைய சுதந்திரக்கட்சி செயலாளர் ஜே. ஆர்' பி சூரியபெருமவின் நடவடிக்கையில் தமக்கு திருப்தி தரவில்லை எனவும், இதனாலேயே அவரை மாற்றுவது தொடர்பாககட்சியின் அவசர செயற்குழு கூட்டம் கூட்டப்படுவதாகவும் ஸ்ரீமாவே பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளனர்.

புதிய கட்சிச் செயலாளராக ஸ்ரீமாவோவின் உறவினரான அநுரத்தரத்வத்த நியமிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

### கடற்படை...

தொடர்ந்து ம்மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவும் இத்தாக்குதல்கள் இடம் பெற்றன. 07

### வடமராட்சி...

சென்றுள்ளனர்.

தமது வளர்ப்புப் பிராணிகளைக் கைவிட்டுச் சென்றுள்ளதால் அவை வீதிகளில் அலைந்து திரிகின்றன. (09, 07, 06)

### பிரதிப்...

அமைச்சர் அமரதுங்கவுடன் முப்படை அதிகாரிகள், தமிழ் குழுவொன்றின் உறுப்பினர்கள் ஆகியோரும் சென்றிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

### கொக்குத்...

பலர் - 1, வானொலி தொடர்பு சாதனம் - 1.

இம்மோதலில் 12 போராளிகள் வீரமரணமடைந்தனர். இச்சம்பவத்தை தொடர்ந்து நேற்று காலை முதல் கொக்குத்தொடுவாய் பகுதியில் விமானக்குண்டுவீச்சும், கடற்படை பீரங்கித் தாக்குதலும் தொடர்ந்தது.

### பேச்சுரிமை...

அண்மைக்காலமாக தமிழ் நாட்டில் நடைபெறும் ஈழத் தமிழர் ஆதரவு மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் தமிழக அரசினால் தடைசெய்யப் பட்டுவருவது தெரிந்ததே.

இது குறித்து தமிழகத்தில் உள்ள பல தமிழ் இயக்கங்கள் ஆட்சேபம் கிளப்பி வருவது குறிப்பிடத்தக்கது.

### இந்திய...

கருப்பசாமியை கொழும்பில் அதிகாரிகள்தனியே கொண்டு சென்று விசாரணைக்குட்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

கருப்பசாமி எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்பாக இலங்கையை விட்டு வெளியேற தற்போது உத்தரவிடப் பட்டுள்ளது

### கடற்படைப்படகு...

ரப்பகுதிகளில் கடற்படை பீரங்கிப்படகுகள் நடமாடி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. 07

### வடமராட்சிப் பகுதி...

வுள்ளன.

இவர்களின் நிலைமைகள் குறித்து புனர்வாழ்வு அமைச்சின் செயலாளருக்கு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

வடமராட்சி மக்களின் தற்போதைய நிலைமைகள் குறித்து சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கமும் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்துள்ள மாணவர்கள் தமது இருப்பிடங்களுக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ் செயலகத்தில் நேற்று இது தொடர்பான உயர் மட்டக் கூட்டம் அரச அதிபர் கே. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது. (06)

## வீரமரணம்

மணலாறு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மோதலில் மேஜர். டிசான் (இலங்கநாதன் ஏறாவூர்), 2ம் லெப். கோபி- (சிவகுமார் மானிப்பாய் மேற்கு), 2ம்லெப் காந்தி- (ராஜன், வாழைச் சேனை), லெப். கோவலன்- (மனோகரன், மட்டக்களப்பு) சிறிஸ்ரி- (சிவகுமார், புலுலு மலை), சந்துரு (குலேந்திரன் தம்புலுவில், அம்பாறை), லெப் வசந்தன்- (ரவீந்திரன் வவுனியா), 2ம் லெப். நிசாந்தன்- (புலேந்திரன், வவுனிக்குளம்), 2ம் லெப். சாஸ்திரி- (சந்திரதாஸ், மட்டக்களப்பு), லெப். நீலன்- (சேதுலிங்கம், வல்வெட்டித்துறை), மதின்- (தங்கராசா, களுவாஞ்சிக்குடி) காசிம்- (பத்மநாதன் காலையடி தெற்கு, பண்டத்தரிப்பு) ஆகியோர் வீரமரணமடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

★ ★ ★

ஆனையிறவுப் பகுதியில் 04 / 08 / 91 அன்று நடைபெற்ற மோதலில் காயப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தயோகா- (கருப்பையா யசோதாதேவி,மூதூர்)நேற்று வீரமரணமடைந்தார்.

### யாழ் மாவட்டம்...

டங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டு தலைமையகம் நேற்று அறிவித்தது,

### விமானங்கள்...

கள் வடமராட்சிப்பகுதியிலும் தீவகப்பகுதியிலும் நேற்றுக் காலை தொடக்கம் மாலை வரை சுற்றி வட்டமிட்டபடி இருந்தன.

கரையோரப்பகுதிகளிலேயே அதிகமாக ரோந்து சென்றதைக்காணக் கூடியதாக இருந்தது. 07

### கடற்படையும்...

யில் சோடா தொழிற்சாலை முன்பாகவும் குண்டு வீழ்ந்து வெடித்தது. விமானங்களை எதிர்த்து விடுதலைப்புலிகள் தாக்குதலை நடாத்தினர்.

இதேவேளை பருத்தித்துறை முனைபகுதி வெளிச்சவீட்டுக்கு நேராகவும் வடமராட்சி கிழக்கு கடற்பகுதியிலும் கடற்படை பீரங்கிப் படகுகள் சிலவற்றைக் காணக் கூடியதாகவும் இருந்தது. முனைப்பகுதியில் கடற்படையின் தாய்க்கப்பல் ஒன்று தரித்துள்ளது.

பிந்திக் கிடைத்த தகவலின் படி ஊறணி, தொண்டமனாறு பகுதிகளிலும் விமானத்தாக்குதல் பரவலாக இடம்பெற்றது. (09 07)

## திருகோணமடுத் தாக்குதல் குடியேற்ற அதிகாரி பலி

திருகோணமடுப் பகுதியில் வெலிஓயா நோக்கிச் சென்று கொண்டிருந்த அரச வாகனம் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தினர்.

இதனால் வாகனத்தில் சென்று கொண்டிருந்த குடியேற்ற அரச அதிகாரி ஒருவர் பலியானார் பாதுகாப்புக்குச் சென்ற படைவீரர் ஒருவர் காயமடைந்தார் என நேற்று செய்தியாளர் மாநாட்டில் கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்தார்.

## மாதகலில் கைதான மீனவர் கீரிமலைக் கடலில் வீசப்பட்டனர்!

நேற்றுக்காலை மாதகல் கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த எட்டு மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைதான இவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்ட பின் கீரிமலைப் பகுதி கடலில் வீசப்பட்டனர். நேற்று நண்பகல் 1. 30 மணியளவில் இவர்கள் நீந்திக் கரை சேர்ந்தனர்.

கருணாகரன் (21) என்பவர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். இதேவேளை மாதகலில் கடற்படையினர் நடாத்திய பீரங்கித் தாக்குதலில் மாரி சங்கூடலைச்சேர்ந்த ந. தம்பிமுத்து (45) என்பவர் காயமடைந்தார்.

## மன்னாரில் அரச ஊழியர்கள் லீவில் செல்ல முடியாத நிலை

மன்னார் தீவிற்குள் வெளியிடங்களில் இருந்து மக்கள் செல்வதை இராணுவம் தடை செய்துள்ளதால் அங்குள்ள யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் அரச ஊழியர்கள் விடுமுறையில் தமது சொந்த இடங்களுக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ஊழியர்களின் உறவினர்கள் மன்னாருடன் தொடர்புகொள்ள முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

## இந்தியாவில் சிங்களவருக்கு சலுகை கேட்கிறது ஸ்ரீலங்கா

இந்தியாவுக்குச் சென்று பௌத்த தலங்களைப் பார்வையிடும் இலங்கையர்களுக்கு சலுகைஅடிப்படையில் ரயில் பயணக் கட்டணம் நிர்ணயிக்க வேண்டும் என்று இலங்கை இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேபோல இந்திய பல்கலைக் கழகங்களிலும் சிங்கள மாணவர்களுக்கு கூடுதலான இடம் வழங்கவேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு அண்மைக்காலமாக பல கெடுபிடிகள் இருப்பது தெரிந்ததே. 08

## லலித் கூட்டங்களில் பங்குபற்றும் ஐ. தே. க. உறுப்பினர்க்கு கல்தா

லலித், காமினியின் அதிருப்தியாளர்கள் குழுவின் கூட்டங்களில் ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினர்கள் பங்கு பற்றுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.கட்சியின் செயற்குழு இத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

அதிருப்தியாளர்களின் நடவடிக்கைகளில் பங்கு பற்றும் ஐ.தே.கட்சி உறுப்பினர்களின் மீது நடவடிக்கையெடுக்கப்படுமெனவும்அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது

## தென்பகுதியில்கொலைச்சம்பவங்கள் மீண்டும் அதிகரிப்பு!

தென்பகுதியில் கொலைச் சம்பவங்கள் சமீபகாலமாக வெகுவாக அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அஹுங்கல்ல மித்தரமுல்ல என்ற இடத்தில் அண்ணனும், தங்கையும் கோடரியினால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

எம்பிலிப்பிட்டியாவில் 9வயதுச் சிறுமியும், அவரது தாயாரும் வெட்டிக்கொல்லப்பட்டனர்.

மித்தெனியப்பகுதியில் கிராமோதய சபைத் தலைவரும், இளைஞர் சேவை மன்றத் தலைவரும் கத்தியால் வெட்டிக் கொல்லப்பட்டனர். (08)

## தனியார் ஆஸ்பத்திரிகளை விசாரிக்க அரசு நடவடிக்கை

நாட்டில் உள்ள சகல தனியார் ஆஸ்பத்திரிகளின் பிரச்சினைகள் பற்றி ஆராய தொழில் அமைச்சராகஇருந்த ஜி. எம் பிரேமச்சந்திரா நியமித்த குழு தனது விசாரணைகளை விரைவில் நடாத்தவுள்ளது

இந்த ஆஸ்பத்திரிகளின் குறைபாடுகள் ஊழியர்களின் சம்பளம், நோயாளர்களிடம் அதிககட்டணம் அறவிடுதல் என்பன குறித்து இந்தக்குழு விசாரணை செய்யும்.

ஜி. எம். பிரேமச்சந்திரா பதவி விலகி அத்துலத்முதலி குழுவில் சேர்ந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. 06

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 18.10.91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.